உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவொற்றியூர்க்கலம்பகம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவானாகிய

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

இயற்றப்பட்டு,

கொ-லோகநாதமுதலியாரவர்களால்

சென்னை:

மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

குரோதி௵ - மகரரவி.

1904.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS

சிவமயம்.

சாத்துகவி.

இந்நூலாசிரியர் போதகாசிரியராகிய

இலக்கணக்கடல் - தசாவதானம்

பேறை - ஜெகநாதப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

வலிவான தவருறையு மொற்றியூர்க் கலம்பகத்தை வாணி மெச்ச
மலிவான தொடைபொருட்சொ லாதிநய வலங்கார மன்னி நிற்பப்
பொலிவான செந்தமிழ்தே ரட்டாவ தானியெனப் பூவை வந்த
கலியாண சுந்தரநற் கவிராஜ சிங்கமது கழறிற் றம்மா.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவொற்றியூர்க்கலம்பகம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

ஒற்றிக் கலம்பகத்தை யொண்சயில மங்கைபங்க
ரொற்றிக் கலம்பகத்தை யோதுதற்கிங்—கொற்றி
குணலைய குஞ்சரனைக் கூறுசெய்த கொற்றக்
குணலைய குஞ்சரனைக் கூறு.

நால்வர்துதி.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சிவஞானக் கடலருணீர் கனிமடுத்தற் புதமின்னற் றிறமாச் செய்து
பவஞானப் புறச்சமய வெப்பமறச் சற்சைவப் பைங்கூழோங்க
நவஞானத் தமிழ்மறையா மழையதனை நானிலத்து நன்கு பெய்த [வாழ்.
தவஞானக் கொண்டல்களா நால்வர்திருத் தாண்மலர்க டலைமேற் கொள்

நூல்.

மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

தரவு.

நாரணனார் தண்ணுமையி னாதவொலி யேகறங்க
வாரணனார் தாளத்தி லருமறைநூ லேபிறங்க
விந்திரனா ரெக்காள மெச்சரிக்கை யேயூதப்
பந்தியினிற் கந்திருவர் பல்லாண்டு பலவோதத்
தண்ணமுதத் திண்கிரணன் றனிக்கவிகை யேநிழற்ற
விண்ணுலக மங்கையர்கள் வியனாத்தி யேசுழற்ற
வடிவாம்பி கையுபய மலர்விழிக ளேகளிக்க
வடியார்க ளனுக்கனுற வரும்பவனி வருவோய்கேள்.

தாழிசைகள்.

அவனன்றி யோரணுவு மசைவுறா தெனுஞ்சொல்லை
யவனிமிசை காட்டுதற்கே யசைந்தாடி வந்தனையே
அளக்கரினிற் கேசவன்ற னுகமதிற் றுயல்வரலைத்
துளக்கமுற வேயிங்குத் தோற்றிடவே வந்தனையே
ஆட்டுவித்தா லேயுலக மாடுமென்ற வுண்மையினைக்
காட்டுவிக்க வேசற்றுக் கனிந்தொசிந்து வந்தனையே
பேதைமுதற் பேரிளம்பெண் பெரிதுவந்து தாமயங்கி
நாதவுன தழகதனை நணிநிற்க வந்தனையே.

அராகங்கள்.

பலதலை யுயரிய பனிமலை தருமகள்
வலமதி னிலவுற மகிழ்கொளு முடலினை
அரவணி கணபதி யயில்புனை முருகைய
னுரமதி லணைதர வுவகைகொ ளுருவினை
அரியய னிருவரு மமருற நடுவினி
லரியதொ ரனலென வமர்தரு தனுவினை
எவரெவ ரெவுலகி லெதுகரு துநரவ
ணவரவர் மனமதி லழகிய வடிவினை.

பெயர்த்துந்தாழிசைகள்.

மச்சத்தி னோரிருகண் மணிபறித்தா யென்பரது
னிச்சைவளர் சாத்தனை ரியற்றுசிறு விளையாட்டே
கூர்மத்தின் முதுகோட்டைக் குறித்தெடுத்தா யென்பரதுன்
சீர்மைமலி கணநாதர் செய்தசிறு விளையாட்டே
வராகத்தின் வலிமாய மருப்பொடித்தா யென்பரதுன்
பராகநறும் பூங்கடம்பர் பழகுசிறு விளையாட்டே
நரசிங்கப் புரணியினை நைத்துரித்தா யென்பரதுன்
வரவீர பத்திரனார் வகுத்தசிறு விளையாட்டே
வாமனனார் கங்காளம் வாங்கினை யென்பரதுன்
காமரணி வயிரவனார் கண்டசிறு விளையாட்டே
மற்றவதா ரத்திலருள் வழங்கினை யென்பரவை
முற்றநின்றன் றொண்டியற்று முனிவரருள் விளையாட்டே.

நாற்சீரோரடியம்போதரங்கம்.

அகள சகள வருவுரு மேவினை
சகல சமய சமரச மாயினை
துகளில் சுருதி துரியம வாயினை
திகழு மிதய சினகர னாயினை.

முச்சீரோரடியம்போதரங்கம்.

தமனிய மலைதனை வளைத்தனை
தகுதியு றுகயிலை கிளைத்தனை
சமயமு மறுவகை படித்தனை
தகுதிரு வெனநட நடித்தனை.

இருசீரோரடியம்போதரங்கம்.

அக்கர நாட்டினை - சக்கர நீட்டினை
யருளது காட்டினை - மருளது வீட்டினை
யரியுரி வீக்கினை - நரிபரி யாக்கினை
வெற்றியூர் சேவினை - யொற்றியூர் மேவினை

ஆதலால் - தனிச்சொல்.

நிலைமண்டிலவாசிரியச்சுரிதகம்.

பஃறலைப் பணைப்பாய்ப் பள்ளிகொண் டோனுஞ்
சிஃறலைப் போதனுஞ் சேவித் திறைஞ்சச்
சீர்வள ரொற்றிச் சினகரந் தன்னிற்
பேர்வளர் பவனி பிறங்குதியா கேச
வாண்டு பலவா யகில மதனி
னீண்டு தமியேன் வேண்டுவ சிலவே

அவைதாம்

கொச்சைச் சமயர் குலவிப் பணியும்
பிச்சைப் பசுக்களைப் பேணு தியங்கிச்
செத்துப் பிறக்குந் தேவர் தம்மை
யெத்தரு ணத்தினு மெண்ணு திருந்து
நாத்திகஞ் சொல்லி நலியு மூடரை
நேத்திரத் தானு நேரா தவிர்ந்திட்
டகம்பிர மம்மெனு மறிவில் லோரைச்

செகமதி லெளியேன் சேரா தொழிந்திட்
"டோரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
வாரா வின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே" யென்ன
வுண்மை பேசி யொண்சிவ மீதென
வண்மையாக் காட்டிய வாத்தர் முதலா
நின்னடி தன்னை நினைக்கும் பெரியோர்
தன்னடி யென்றன் றலையிற் சூட்டி
யிறுமாந் திருக்கு மிழுக்கில் வாழ்வைப்
பெறுமா றருள்க பெருவிபூ தியனே. (௧)

நேரிசைவெண்பா.

பூதிருத்தி ராக்கப் பொருள்களையே செல்வமெனு
மாதிபுரி யான்றவர்பா லாக்கியெனை—மேதினியின்
மேனோக்கி வேடமிடு மேனியராம் பேதையர்தம்
பானோக்கி வாழாது பண். (௨)

கட்டளைக்கலித்துறை.

பண்ணுவ துஞ்சிவ சங்கரன் றொண்டர் பணித்தொழில்யா
னெண்ணுவ துங்கண்ணன் காணாத பொன்னடி யின்புகழா
மண்ணுவ தும்பிற வித்துய ரீயு மலமொரைந்தா
நண்ணுவ தென்னிவைக் காமுத லாமொற்றி நற்பதியே. (௩)

கலிநிலைத்துறை.

பதியே யிழந்து பவமே நினைந்து பலவாகச்
சதியே புரிந்து சகமே வதிந்து தளர்வீர்காள்
சுதியே மிகுந்து துதியே பரந்த சுடரொற்றிப்
பொதியே யணைந்து நிதமே பணிந்து பொலிவீரே. (௪)

கலிநிலைவண்ணத்துறை.

தனதத்தத் தனதத்தத் தனதத்தத் தனதத்தத் தனதானா.

பொலிவற்றுத் தினமற்பக் கலைகற்றுத் தெருளற்றுப் பொருண்மாலே
சொலிவைத்துப் புகழ்கெட்டுப் புவனத்திற் றளர்வுற்றுச் சுழலாமே
புலியக்கத் ததளைச்சுற் றரைபொற்பத் திருவொற்றிப் புணர்வார்பா
லொலிமுற்றுத் துதிசொற்றுக் கதிபெற்றுப் பயன்மிக்குற் றுயர்வாயே.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உயர்வளைக் குழையும் விளங்குசெஞ் சடையு மோங்குவெண் ணீறுறு வடிவு
புயன்மிக நாண வருள்பொழி விழியும் பொங்கர வப்பணிப் பொலிவுந் [ம்
துயரறு புலியி னதள்செறி யிடையுந் துணையடிக் கமலமு மறவே
னயரறுத் தெனையா ளொற்றியூர் மேவு மமலனே யாதிநா யகனே. (௰)

புயவகுப்பு.

பதினாறுகலைவண்ணப்பா.

தானனா தனதான தானனா தனதான
தானனா தனதான தத்தத் தனந்தன.

ஆதிநா யகிவேத போதநா யகிபாதி
யாகநா யகியாக வைத்துப் பொருந்தின
வாவலா பிறையோக சாதனா தியர்சேரு
மாணியா டகமேரு விற்பெற் றிருந்தன
வாழிமீ தெழுமால காலமே யமுதாக
வாதிநா ளுணுமாறு நத்திச் செறிந்தன
வாள்கணீ யடியேனை யாள்கணீ யெனுமால்கை
யாளமா னவிராழி யைத்தொட் டெழுந்தன (௰௧)

வேதமோ திடுவேத னீடுசே கரனோவ
வீறுமோ டுறுமாலெ டுத்துப் பொலிந்தன
வேழமா முகனோடு வேலுலா மொருசேயும்
வீரமார் புறுமார் பணைத்துச் சிறந்தன
மீறுமா தவவேட னோடுபோர் கொடுவீர
வேகநீ ளொருகோல்கொ டுக்கத் துணிந்தன
வேள்விசா லையினூடு லாவுபா னுவைமோதி
வீறுசேர் புகழ்மேவி மெச்சத் திகழ்ந்தன (௰௨)

பீதனீ டடல்கீறு மேறனு ணீறுமாறு
பேதமா லறவேகி ழித்துப் பிறங்கின
பீடுலா முழையோடு நீடுமா ரழல்வாகை
பேறுசா லுறுசூல நிற்கத் திகழ்ந்தன
பேணுநால் வர்கடேற நீழல்வாய் பொருள்கூறு
பேசொணா மொழிநேர்கு றித்துப் பகர்ந்தன
பேழ்கொண்மூ வர்கணோடு நாசமா கிடதாசர்
பேசுமால் கலையோடு றழ்த்துத் திணிந்தன (௰௩)

சீதைநா யகனேறு சேனம்வா டுறுமாறு
சீறுநீ ளரவார்தொ டிச்சுற் றியங்கின
சேணிலா வியதேவர் பூமிமே லுயர்வாழ்வு
சேரவே யிருசீர்த ழைக்கப் புரிந்தன
தீனனு மெளியேனு ஞானமே பெறுமாறு
தீமையா வையுமேது டைக்கப் பரிந்தன
தேனருு மலர்வாவி நீடுமா திபுரீசர்
சீருலா வியமாதி ரப்பொற் புயங்களே. (எ)

மேகவிடுதூது.

நேரிசைவெண்பா.

புயலேநீ செஃறிசையிற் பொறப்பார்ந்த வாரிக்
கயலே யமர்ந்திட்ட வண்ணல்—செயலதனை
யொற்றியூ ரிற்கண்டெ னூழ்வினையைச் செப்பியுன்றன்
பெற்றியினைச் செய்வாய் பெரிது. (அ)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பெருகுசராசரமனைத்துஞ்சிவகணங்களாய்விளங்கும்பெட்புவாய்ந்த
மருவுதிரு வொற்றிநக ரெல்லையினை யேயடைந்து வாழ்ந்த பின்ன
ரொருவருநல் லாநந்தம் விளைவிக்கு மொருமுத்தி யுண்மையென் றுங்
கருகுபல நரகங்க ளுளவென்று மாராய்தல் கதைய தாமே. (கூ)

கட்டளைக்கலித்துறை.

தாயக மாகி யமரரைக் காக்குந் தனிமுதல்வ
னாயக மாய்முத் தொழிலினைச் செய்து நடாத்துபவன்
சாயக மாயரி தன்னைக் கரத்திற் சமைத்திடுவோன்
மேயக மாகுந் திருவொற்றி யூரில் விளங்கினனே. (கo)

மடக்கு.

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

விளங்கு மென்மா சடையானே வீறு மலமா சடையானே
வியனு ரனற்கோவுடையானே விழையும்வனக்கோவுடையானே
துளங்கும் பணிலக் குழையானே துன்னுங் கரத்திற் குழையானே
தோன்று மம்மைக் களத்தானே தொடியா ரம்மைக் களத்தானே

தளங்கொடாமத் தொடையானே தாவு மரவத் தொடையானே
 தரக்கி னுரிவை யரையானே தரும வரிவை யரையானே
நளங்கொள் வீரக் கழலானே நன்மெய் யொளிர்பொங் கழலானே
 நாடு மாதி புரியானே நண்ணு மிழைமுப் புரியானே. (கக)

இரங்கல் - வெண்பா.

புரிந்தமென்மஞ் சத்திநறும் பூவணையிற் றூங்காள்
பரிந்தூட்டும் பாலுணவைப் பாராள்—விரிந்தவிதழ்த்
தேன்கொன்றை மாலையையே தேடியொற்றி யூரதனிற்
றான்செய்வா டொண்டாங் தவம். (கஉ)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தவமிவக்குந் திருவொற்றித் தனிமுதலே யன்றுதில்லை தன்னிற் சார்ந்து
சிவசிவென முழங்குறுமத் தளத்தவரு லுதையுண்டு சீவன் போன
சவமெனவீழ்ந் தின்றளவுங் கிடக்குமா லெச்சிலர்தஞ் சாமி யென்ன
நவமுறுத்திப் பணிவதுமே னவிவதனுக் கேதுவென நவில லாமே.

கலித்துறை.

ஆமே புகழும் பொருளு மரிய வருளியல்பு
நாமே புரியும் பிழையும் பிணியு நடலைகளும்
போமே நமைவிட் டருகி யடரும் பொழிலிடையே
தேமே கமழும் பிரம புரத்தினைச் சென்றிடினே. (கச)

கட்டளைக்கலித்துறை.

சென்றூர் திருவொற்றி யூரினை நாடித் தினந்தினமு
நின்றூர் படம்பக்க நாதர் சரணை நினைந்துருகித்
தின்றூர் சிவானந்த போதத் திரளிற் றிகழமுதை
வென்றூர் பெரியவர் தென்றிசை யோன்செயும் வேதனையே.

தாழிசை.

வேதனோட வெள்ளைமேனி யானுமோட விண்ணவர்
 வேந்தனோட விந்திராணி வெருவியோட விண்டிகழ்
சீதனோட வெயிறுதிர்ந்து தினனுமோட மகிடமூர்
 தென்னனோட விவனவாவு தேவியோட விண்டெனுந்
தாதனோட மலரின்மாது தானுமோட விரதியுந்
 தவறியோட வேனிலாளி தாவியோட வுரகர்க
ளுதனோட யாகசுத்த னவிரமோட வெற்றியா
 ளுந்தகந்த டக்கைகொண்ட நல்லவொற்றி நம்பனே. (கரு)

கலிவிருத்தம்.

நம்பக லின்க ணனிவெயில் வெள்ளை
யம்புலி யின்க ணளியெழு நாவில்
வெம்புந் தணலுற வீறுசெய் விக்கு
நம்ப னொற்றியூர் நாயக னட்டமே. (கஎ)

அம்மானை.

மடக்குத்தாழிசை.

நாட்டும் புகழ்வாய்ந்த நம்பலகை நாதனார்
கூட்டிவைக் குந்தூது கொண்டனர்கா ணம்மானை
கூட்டிவைக் குந்தூது கொண்டனரே யாமாயி
னாட்டினர்க ளெல்லா நகையாரோ வம்மானை
நகைப்பரென வூரொற்றி நண்ணினர்கா ணம்மானை. (கஅ)

இஃதுமது.

அங்கணொற்றி நாத ரழன்மான் றுடிசூலங்
கங்கல் பிணகங் களைத்தரித்தா ரம்மானை
கங்கல் பிணகங் களைத்தரித்தா ராமாயி
னங்க மறிவரியா ராவரோ வம்மானை
யங்கம் பலகையுரு வல்லரோ வம்மானை. (கக)

பாங்கிதலைவிக்குரைத்தல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அம்மானை யெய்திரித்தோ னனேதா னதுபோன வடைவே தென்பார்
கைம்மாவொன் றிவ்வழியே குறிதப்பி வந்ததுண்டோ கழறு மென்பா
ரிம்மாவின் றழைபாரீ ரினிதென்பா ரேந்திழையே யெழிலா ரொற்றிப்
பெம்மானை யறியோா யிவரெண்ண மென்னேயோ பேசுங் காலே.

மடக்கு.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

காலனை யுதைத்ததுங் கழலேயாங் காமனை யெரித்ததுங் கழலேயாம்
வேலனை யீன்றதுங் கண்ணேயா மீப்பவம் வேயின் கண்ணேயாம்
பாலனுக் கீந்ததும் பாலேயாம் பார்வதிக் கீந்ததும் பாலேயா
மாலயன் போற்றிடும் பதியீரே மகிழுமொற்றிப் பதியீரே. (உக)

தவம்.

கலிநிலைத்துறை.

பதிபல வோடிப் பரவையி லாடிப் பகலிரவாய்
நதியவை நாடி நளிர்வரை கூடி நலிவீர்காள்
மதிநிறை வேணி மழுவணி பாணி மாதேவன்
வதிதரு மொற்றி கதியென வுற்று வாழ்வீரே. (உஉ)

பூவைவிடுதூது.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வாழி சைந்திட வாய்தி றந்தொரு வார்த்தை பேசுதி பூவையே
தாழி யைந்திட நானி ருப்பது தருமமோ வுனக் கழகதோ
பேழி யங்கிடு மொற்றி யூரினிற் பேதை நானெழு நாளினே [யே.
யேழி யாண்டென வெண்ணி யேங்கலை யிறைவர்பா லினி தறைவை

குறம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அறைகுவேன் பலகுறியுங் கண்முன்னே கண்டதுபோ லஞ்ச வேண்டாந்
தறைமெழுகிக் கோலமிட்டு நெற்குவித்திட் டதன்மீதிற் சமைத்த செம்பிங்
குறைவதுட னேர்பிடிநெல் லொற்றைபட்ட தாதலினு லொற்றி யூர்வாழ்
பிறைமுடியர் வந்திவெர் பெரியபணம் பழஞ்சீலை பெய்வாய் நீயே. (உச)

தலைவியைக்காண்டல்.

கட்டளைக்கலித்துறை.

பெய்வளை மாதர்க ளாயத்தை நீங்கிப் பிறைப்பணிலஞ்
செய்வழி யோடுந் திருவொற்றி யூர்நற் செழும்பொழிலு
ளெய்யிடை மேலிரு பாரத் தனமலை நோயியற்று
மெய்யிளைப் பாறத் தனித்துநின் றுய்கொலென் மெல்லியலே.

கலிநிலைவண்ணத்துறை.

தனனதன தனனதன தனனதன தனனதன தத்ததானனு.
இயமடர வசமழிய நமபடர்கள் வருபெரிய வெச்சமாயுமே
பயமொழிய மனமதனி லளவில்பல கருணைவளர் பத்திநீடுமே
முயலமர ரரியயர்க ளறிவரிய வடியர்புகழ் முத்திகூடுமே
யுயர்பலகை வடிவமது கொளுநமது பரமர்மகி ழொற்றியூரிலே.

களி.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஊரியினை யூடுருவி யோங்குஞ் சோலை
யொற்றியூர் மகிழ்கள்ளை யுண்டு தேக்குஞ்
சீரியோர் புகழ்களியேஞ் செப்பு முண்மை
சிறிதேனும் பிழையாது செவ்வே கேண்மோ
வேரியிற்சங் கரியைக்கோ பாலர் சேர்ந்து
வெள்ளைவா ரணனைப்பெற் றுவந்து நின்றார்
நாரிசீ தேவிதார் வாச வன்ற
னற்றேளைச் சேர்ந்தணைய நாடினாளால். (உஎ)

தலைவிமென்மைத்தன்மைக்கிரங்கல்.

நேரிசைவெண்பா.

நாடிநெடி யோன்பணியு நம்பரொற்றி யூரதனிற்
பாடியளி மூசுகுழற் பாவையெனைத்—தேடிடுமே
பாலைவன மோடிப் படருகையின் மென்றளிர்நேர்
காலுமுட் டைத்திட்டக் கால். (உஅ)

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

காலங் கடந்த பிறைச்சடையுங் கவினார் நீற்றுப் புண்டரமுங்
கருணை நிறைந்த முக்கண்ணுங் கதிர்கொள் வெள்ளைச் செவிக்கு
மால மடர்ந்த கறைமிடறு மணிநீள் கொன்றை மாலிகையு [ழையு
மழகார் புலியி னதளிடையு மரியின் விழிசேர் கழலடியுந்
தால முதவு மலைமடந்தை தனையரிருவர் தம்முடனே
தரும விடையின் மேலேறித் தயவாய் வருநற் காட்சியுமே
சால வடியார் தம்முடனே தரிசித் துய்ந்திங்கருள் பெறலாஞ்
சார முத்திக் கதியருளச் சமைந்த வொற்றிப் பதிதனிலே. (உகூ)

மறம்.

தாழிசை.

இல்லடுத்துப் பெண்கேட்க விங்குவந்த தூதநீ
யெங்கண்மர பின்பெருமை யெள்ளளவு மோர்ந்திலாய்
செல்லடுத்த சோலையொற்றிச் சிவனருடன் மைந்தனுக்குச்
சிறுமிகொள்ளப் பட்டபாடு தெய்வந்தா னறியுமே
வில்லெடுத்த கொற்றவன்றன் விட்டவோலை கொண்டுபோ
விருதுபேசி வந்தமன்னர் முடியுதிர்ந்த மணிகளே
கல்லெடுத்துக் கிளிகடியு மெங்கள்சேய ராடலாங்
கருணையற்ற பேரைநாங் கடிந்துவக்கு மறவரே. (௩௦)

தலைவியைவியத்தல்.

கட்டளைக்கலித்துறை.

மறங்கொண்ட வந்தக னாணையைச் சற்று மதிக்கிலதே
புறங்கொண்ட பேருறை யாதி புரியின் பொழிலதனு
ணிறங்கொண்ட மாந்தளிர் மேனியள் வேல்புரை நீள்விழிகள்
திறங்கொண்ட வெங்கடுக் கக்காது தேனைச் செவச்சொரிந்தே.

இரங்கல் - கொச்சகம்.

சொரிந்திட்ட மலர்ப்பொழிலுட் சூழ்ந்திட்ட வாவியெலா
நெரிந்திட்ட மணங்கமழு நிறையொற்றி யூர்நாட்டில்
விரிந்திட்ட பெருங்கடலே மேய்வளையே கம்புள்ளே
பிரிந்திட்ட வென்றலைவன் பெயர்ந்ததிசை பேசுவீரே. (கஉ)

நேரிசைவெண்பா.

பேசரிய ஞானமருள் பெண்பாக ரொற்றியூர்
வாசமலி தண்டலையில் வாழ்வுற்றே—னேசக்
கரும்புருவக் காரிகையைக் காண்டிருவை நேர்ந்த
கரும்புருவக் காரிகையைக் கண்டு. (கங)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கண்டு நின்றனை யைம்புல னேமகிழ் காமக் கைதவத்தில்
தொண்டு செய்கிலை யொற்றி யூர்வளர் தொன்மை யடியவர்பால்
விண்டு பேசிலை நால்வ ரின்புகழ் வியந்து நாடோறுங்
கொண்டு போதர வென்ன வோதடை கொடிய கூற்றுவற்கே.

தவம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வற்கலை கொண்டும் வலியவர் தண்டும்
வனசரு குண்டும் வளியது தின்றுங்
கற்களி லென்றுங் கனலிடை நின்றுங்
கனபசி விண்டுங் கதிபெற லிலையா
னற்கலை தேர்ந்த வொற்றியை யார்ந்து
நவமனை வேய்ந்து மனைவியை வாய்ந்து
பொற்பணி சார்ந்து மகவுடன் வாழ்ந்தும்
புகழ்தரு சிவகதி நிகழ்வது நிசமே. (கரு)

நேரிசைவெண்பா.

நிசவடிய ராகல்லார் நேயத்தைக் கொண்டு
கிசவடிய ராகல்லார் கேண்மை—வசையொழித்துப்
போற்றுவார் தம்பாற் புகழ்கல்வி பொன்னுறி
யாற்றுவா ரொற்றியப்பு னூர். (கசு)

சி த் து.

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆர்ந்திட்ட வொற்றியூர்த் தியாகேச ரடியவரி னடிமை யாகி
யாயிரமா யிரமாக வித்தைகற்ற சித்தரியா மறிவின் மிக்கீர்
சார்ந்திட்ட கழுநீருட் காரடகே யானுலுந் தயவா யீந்தாற் [பே
றங்குமனே பொன்னியங்கச் சுவர்யாவும் வெள்ளியதாச் சமைத்து வைப்
நேர்ந்திட்ட விரும்பைநா கத்தைமா தங்கமா நிலவச் செய்வே
நிகழ்ந்த மாதங்கத்தி லிருப்பைக்கண் ணுதலார்க்கு நிதங்காண்பிப்பே[வே
மோர்ந்திட்டவெள்ளிவரின்முன்னம்பொன்னென் றுரைத்திங்குறுதிசொல்
னுற்றநவ லோகங்க ளொன்றையொன் ருச்செய்வே முண்மை தானே.

கிளவிவேட்டல்.

கட்டளைக்கலித்துறை.

தானே தனக்கு நிகரான வொற்றித் தலவரையில்
வானே பொருவு நினதிடை கொங்கைகள் வாள்விழிகள்
தேனே யுருக்குங் கொடியோ குவடோ தெறுங்கணையோ
மானே திருவாய் மலர்ந்திடு வேண்டு மகிழுறவே. (௩அ)

இரங்கல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மகிழு மொற்றித் தனிநகரில் மகிழ்கோ டரத்தி லினிதமர்ந்து
புகழுங் கிளியே பூங்குயிலே புகர்சா ரிகையே பொன்வண்டே
நிகழுந் தென்ற லிவர்வாடை நிலையில் பருவங் காராதி
தகவாய் வந்து தாண்டினவே தலைவர் வரவே கண்டிலனே. (௩௯)

கைக்கிளை.

மருட்பா.

இலதுளதா மின்னிடையி னேய்கலைமா சுண்ண
மலர்புலர மாவுளர வாழ்தா—ணிலமடையக்
கண்ணுற நின்ற கருங்குழற் காரிகை
கண்ணன் காணரு மொற்றியின்
மண்மக ளென்றே மதித்திடு வாமே. (௪0)

வஞ்சிவிருத்தம்.

வாம மேவு மனையுட
னீம நாடி யிருளினில்
வீம வாடல் விழைபவ
ராம வாதி புரியரே. (௪௧)

கட்டளைக்கலித்துறை.

புரியா ரனந்தன் பிரமனு நாடிப் புகலுதற்குத்
தெரியாத தத்துவன் றெண்ணீர்க் கடல்சூழ் திருவொற்றியாம்
புரியா னருள்வடி வாம்பிகை யென்னுநற் பூவையினுக்
குரியானென் றேத்துவர்க் கேதந் தருள்வ னுயர்பதியே. (சஉ)

எண்சீர்ச்சந்தவிருத்தம்.

தனதன தனதன தனதன தனனா.

பதியிது வதுவென வலமரு மனமே
பழமறை முடிவினி லினிதொளிர் வதுவாய்
விதியரி யிருவரு மிகலுற நடுவே
வியனழ லுருவென நிலவிய பொருளாய்
வதிதரு மமரர்க ணிலையுற வருளான்
மணிமிட றதின்விட நிறுவிய பெரியோன்
மதிமுடி மனைகெழு பிரமபு ரியின்வாழ்
மகிழடி வதிதரு மொருபெரு முதலே. (சங)

அறுசீர்ச்சந்தவிருத்தம்.

தனதன தனதன தய்யன தய்யன தனதன தனதனா.

முதலிடை கடையள வில்லவ ருள்ளவர் முழுவது நிறைபவரா
மிதமுறு மிசைவளர் தையலை மெய்யினி லியலுட னணைபவரா
நுதலினி லொருசுத னிவ்வுல குய்வகை நொடியினி லருள்பவராம்
விதபிர மபுரியி னல்லவர் நள்ளிட விழைவுட னுறைபவரே. (சச)

நேரிசைவெண்பா.

உறைகுநர்க்கு முன்னுநர்க்கு மோர்போது வாளா
யறைகுநர்க்கு மெல்லாமுண் டாகி—நிறைதருமே
யாதிபுரி யூரினையு மாம்பலகை நாதனையுங்
கோதிலகத் தேநிறீஇக் கொண்டு. (சரு)

நற்றாய்கூறல்.

கட்டளைக்கலித்துறை.

கொண்டனை மாலினைச் சற்று நினைப்பின்றிக் கொண்டறவழ்
தண்டலை யாரொற்றிப் பித்தன் செயலினைச் சாற்றுவன்கேள்
வெண்டலை சூடுவ னீமத்தி லாடுவன் மென்சிரசிற்
பெண்டினைத் தாங்குவன் பேய்களொ டோங்குவன் பேதையளே.

ஊசல்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பேதமறு மனமதனைப் பலகை கூட்டிப்
பிறங்குநால் வாக்குச்சங் கிலிகள் பூட்டிப்
போதபசுத் தத்துவவுத் தரத்தின் மாட்டிப்
புகழுறுமெய்ஞ் ஞானக்கம் பளத்தை நீட்டி
மேதகுக லோபதா னத்தைச் சூட்டி
விளங்குதவி சிடையைந்து தொழிலுஞ் செய்வா
ளுதவடி வாம்பிகையோ டாடி ரூச
னவிலொற்றித் தியாகரே யாடி ரூசல். (சஎ)

கட்டளைக்கலித்துறை.

சல்லிய சாலந் தழைத்திடு மொற்றித் தனிநகரிற்
சல்லிய மாலை தரித்தழ கார்ந்திடுஞ் சங்கரனார்
சல்லிய மொன்றினைக் கானத்திற் கண்டு தனஞ்சயற்காச்
சல்லிய மோச்சிந லத்திர மீந்த தயைக்கடலே. (சஅ)

தழை.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கடலனையகருங்கண்ணொண்மாந்தழையையடைந்தவுடன்காமனம்பா
லுடல்பொதிந்தபுண்ணொழிந்தாள்மதிகாய்ந்தகுடொழிந்தாளூற்றமம்ம [று
றிடரொழிந்தாள்குளிர்வாடையிகலொழிந்தாளெழுத்தறியுமெம்மானென்
நடமருவுமொற்றிநகர்மகிழ்தழைபோற்றழைத்திட்டாணவைதீர்ந்தோமே.

கலிநிலைத்துறை.

தோமிருக்கும் புன்குரம்பை கலகலத்துத் தொலைந்திடுநா டொன்மறைக
டாமிருக்கும் விண்டளித்த விழியிருக்கும் விண்ணுலகத் தானவர்கள்
தேமிருக்கு மாலைகளின் மணமிருக்குஞ் சுகமிருக்குந் திருவடியி
னுமிருக்கும் படிசெய்வா னொற்றியினி லேயிருக்கு நம்பன்றானே. (ரு0)

நேரிசைச்சிந்தியல்வெண்பா.

நம்மையா ளாதிபுரி நற்பலகை யாரை நிதஞ்
செம்மையுட னேத்தித் தெரிசிக்கி—னிம்மையினு
மம்மையினு முண்டவன்றா ளன்பு. (ருக)

உயிர்வருக்கையகவல்.

அன்பே வடிவா யமர்நா வரசும்
ஆரூர் பரவை யரிவை மணாளனும்

இசைகொள் காழி யிடத்துக் கிழவனும்
ஈர்ங்கரு ணைக்கட லாமா ணிக்கமும்
உரைத்த தமிழுக் கோடி யோடி
ஊதிய மீந்தவை யோதி யுணர்ந்ததால்
எழுத்தறி யெம்மா னென்ற பெயரை
ஏய்ந்தன ணெற்றி யெம்மா னாதலின்
ஐம்புலன் றன்னை யடக்கவும் வேண்டாம்
ஒன்றிய வுடலை யொடுக்கவும் வேண்டாம்
ஓதிடி லொண்டமிழ் மறைகளை
ஒளவிய மற்றவீ டடைத றிண்ணமே. (ருஉ)

மதங்கியார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திண்கயத்தி னொருதுளிநீ ரருளளிக்குந் திருவொற்றித் தெய்வ நாட்டிற்
பண்கசிய மனங்கசியப் பாட்டிசைக்கு மதங்கியெனும் பாவை யாரே
கண்களெனுங் கடுவாளாற் காளைகளைக் கடிதீர்த்துக் கலங்கச் செய்தும்
வண்கரத்தில் வாளொளிர வாள்களினை வாளாக வழங்க லென்னே.

மடக்கு.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

என்பிணி வாதனை மாற்றுவனே யேமன் றனக்கு மாற்றுவனே
யென்பின் மாலை பரிப்பவனே யெளியா ரிடர்வெப் பரிப்பவனே
வன்ப ருளத்திற் கரியானே மாலயன் போரிற் கரியானே
யன்பர் வாழும் விருப்பினனே யாதி புரிசெவ் விருப்பினனே. (ருச)

இளவேனிற்காலம்.

தாழிசை.

விரும்புதமி ழுடன்கலந்து தென்றல்வருங் காலம்
விரிசோலை மிகச்செழித்து விளங்குகின்ற காலங்
குரும்பைமுலை மாதர்மணங் கொண்டுவக்குங் காலங்
கொழிசித்திரை வைகாசி கூடியதோர் கால
மரும்புகளைத் தூணியிடை மதன்றுறுத்துங் காலம்
ஆஆவென் மீதநங்க னலர்தூற்றுங் காலம்
பெரும்புவன மும்போற்றுந் திருவொற்றி யூரிற்
பெம்மானென் னையகனைப் பிரிந்திருக்குங் காலம். (ருரு)

தலைவனீடத்தலைவிவருந்தல்.

கட்டளைக்கலித்துறை.

காலங் கடந்தவர் மாலயன் மீதிற் கருணைவைத்த
வால மிடற்றின ரொற்றியி னண்ண லணங்கனவ
னீலந் தொடுத்திடி லாற்றேனென் றோதி நிசிபகலா
யோல மிடுவேற் கருள்செய்வ தெக்கண முள்ளுவந்தே. (௫௬)

வஞ்சிவிருத்தம்.

தேனுந்து மொழியுமையாஞ் செல்விமகிழ்
மானுந்து கரதலத்து வாணருறை
வானுந்து பொழிலொற்றி வாழ்வீரே
ஊனுந்து பல்பிறவி யொழிவீரே. (௫௭)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வீரையினிற் படுத்துறங்கு நாரணற்கு மாரணற்கும் விண்ணின் மேயுங்
காரையிவ ரிந்திரற்குங் கிட்டாத வொருபதவி காண லாமே
நீரையருஞ் சடைக்கணிந்த வெம்பெருமான் சிவபெருமா னிலையாய் வாழு
மாரையினின் மதியுரைஞ்சு மொற்றிநக ரென்றொருகா லறைந்த போதே.

பாண்.

இஃதுமது.

அறையுகந்த சத்தியங்க டயிர்ச்சாத மாக்கொண்டோ ரதரத் துற்ற
நறையுகந்தா ரெனையுகந்தா ரெனப்பாடும் யாழ்ப்பாண நன்கு நன்கு
துறையுகந்த வொற்றியரை நான்மறவா நேயமதைத் தாமே தேர்வார்
நிறையுகந்த வவர்பாலிற் பண்ணிசைத்துப் பரிசுபல நேர்த னன்றே.

கொச்சகம்.

நன்றனைத்துஞ் செய்வார்க்கு நவநிதிய மீந்திடுவாய்
கொன்றருந்தும் பாவிகட்குக் குலநமனாய் நின்றிடுவாய்
குன்றனைய கோபுரங்கள் குலவுதிரு வொற்றியினி
லொன்றியுறை தியாகேச வுயர்தெய்வ மாமணியே. (௬௦)

நேரிசைவெண்பா.

மணிதுதையுங் கோயில்பல மன்னுமொற்றி யூரிற்
பணிதுதையுஞ் சங்கரனார் பாதத்—தணியதனைச்
செவ்வைபுறக் கண்களினாற் றேர்ந்துதெரி சித்தவர்க
ளெவ்வுலகில் வாராரென் றும். (௬௧)

ஆசிரியத்தாழிசை.

என்றுஞ் சென்று மியைவரு முச்சியா
ரின்றுந் துன்று மெழின்மகி மொற்றியூ
ரொன்றும் பொன்று முயிரடர் மிச்சையே. (கூஉ)

கட்டளைக்கலித்துறை.

சையவில் லார்ந்த திருவொற்றி நாதர் தனதுதிருப்
பையிதழ் வாய்ந்த மலர்க்கொன்றை யுற்றனன் பாழ்மதனப்
டையயலென் செய்வ னடவா தினியவன் பாணவிற்போ
ரையல ராசுகந் தூணிவைத் தேக லழகுடைத்தே. (கூங)

பிச்சியார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

குச்சுமலி குறிஞ்சியர்கோன் வேலிரண்டுஞ் சொந்தமெனக் கொண்டு வாழ்ந்து
மச்சுமலி மாடமா ளிகைபரவு மொற்றிநகர் மன்னி நின்ற
பிச்சுமலி வார்படையு மேந்தியவர் வேடங்கொள் பிச்சி யாரே
யச்சுமலி விடர்களிலார் குடிகெடுக்க வாண்டிச்சி யாகி னீரே. (கூச)

நேரிசைவெண்பா.

நீருலவு தாமரைமே னீடுருசெவ் வண்டமைந்த
சீருலவு காட்சியினைச் செய்ததே—காருலவு
மோதைமலி யொற்றியிறை யொண்சரணில் விண்டுவிழிப்
போதையருச் சித்திட்ட போது. (கூரு)

கட்டளைக்கலித்துறை.

போதகத் தோனும் புனலுயின் றோனும் புரந்தரனுந்
தோதக மின்றிப் பலபல காலந் துணைவியரிற்
சாதக மாகத் திருவைந் தெழுத்துண்மை சாற்றவவ
ரோதகந் தன்னி லுதித்தன னொற்றி யொருமுதலே. (கூசு)

எழுகூற்றிருக்கை.

நிலைமண்டிலவகவல்.

ஒருபசு பதியா முயர்பெருந் தேவா
யொருமை மனத்து ளுகந்தே மருவினை
யிருக்கையோர்ந் தன்பிலா ரேத்த வொருவினை
யிருமி பொதிந்தனை மூவிலை பரித்தனை
யிருத்தினை பரையை யோர்பாற் றழீஇக்
கற்றோ ராரக் கயிலை யிருந்தனை

புற்றிடங் கொண்டனை பூமி யியங்க
முக்குணம் வாய்ந்த மூர்த்திக ளாயினை
நான்மறை பரவி நவில நச்சினை
மூப்புர மழிய முனைந்திருங் கையிலோ
ரொன்றிய வீங்கமை யுயர்சரத் தூடு
மூக்கோற் றேவா முகுந்த னார்ந்து
நான்முக வைய னாற்குர மிமிழ்த்து
மூவுல கொசிந்து முரல வியக்கியு
மொள்ளிய விருசுட ரோரோ ருருளையா
யிருளாங் கரினி லியைந்தே வுழிதர
வித்திரக் குயவை யெம்மருஞ் செல்வ
செவ்வை நோக்கிச் சிறிது முள்காய்
முறுவ லாற்றி முற்று மெரித்தனை
மூவிறற் றானவர் நாற்றிறப் பாஅ
டைம்முக நின்பா லாறுற வாற்றவு
மருமையா மோக்க மடைந்தே வதிய
நால்வகைப் பதவியு னாயக மென்ன
மூவரி லிருவோர் முற்றுஞ் சூழா
வொருபே றிகைத்தே யுகந்து களித்தனை
யிருளி தனக்கு மெகினந் தனக்கு
மருளது தணக்க மலையுரு வாயினை
நண்ணு முத்தமிழ் நால்வர் தமக்கு
மைம்பொறி கடிய வாறு வழங்கினை
யெவ்வினை தனக்கு மெழுவா யாகினை
யறுபதப் பெருக்க மாங்காங் கியல
வைஞ்ஞிறம் பொலியு மணிதணர் மிசைஇ
நால்வகை யிசையை நலனுறப் பாடுஞ்
சுற்றிலும் பாதபஞ் சூழ்ந்தே மன்னு
மொற்றியூர்த் தியாகனா யோங்கி வாழ்ந்தனை
மும்மலந் தணந்தனை முயங்கிடு மிருமையிற்
கலியாண சுந்தரக் கவினு மோர்பெயர்
சலியா தேற்ற சங்கர னாயினை
கொச்சைத் தேவரைக் குலவிப் பணியும்
பிச்சரி னின்றும் பிரித்தெனை யாண்ட
கருணைக் கடலெங் கண்ணுதலோயே. (௨௭)

நேரிசைவெண்பா.

கண்ணுத லோயே கயிலைக் கிறையாயோர்
பெண்ணுருவிற் பாகங்கொள் பேரழகாய்—மண்ணுலகிற்
ரூத்திரித்தே னொற்றிவளர் சோதியா யெந்நாளுங்
காத்தருள்வ துன்றன் கடன். (௬௯)

கொச்சகம்.

கடனுனக் கேயென்று கழலடிக ளைப்பேணி
யடர்பவர்க ளெப்பதமு மடைவர்சர்வ மானியமாய்
நடமலியுந் தியாகேசர் நம்வடிவாம் பிகையுடனே
தொடர்புகொளு மொற்றியூர்த் தொல்லைநக ரைச்சேர்ந்தே.

கட்டளைக்கலித்துறை.

சேர்ந்தாரை வாழ்விக்கு மொற்றி நகரிற் றினமுமருள்
கூர்ந்தாரை யின்று பவனியிற் கண்டு குறுகுதலுஞ்
சோர்ந்தாள் கலைக ணெகிழ்ந்தாள் வளைக டுணைமுலைக
ளார்ந்தாள் பசலை யினியென்ன செய்குவ னாயிழையே. (௭௦)

நேரிசைவெண்பா.

இழைநிகர்த்த நுண்ணிடையை யேய்ந்தவடி வாம்பா
டழைநிகர்த்த தன்மெய்யிற் சார—மழைநிகர்த்த
பேழ்பவநோ யந்தவிர்க்கப் பெற்றதிரு வொற்றியினில்
வாழ்பவனே யெங்குலதெய் வம். (௭௧)

தாழிசை.

வம்பலருங் குழல்வடிவாம் பிகைமருவு தெய்வம்
வலியகடுத் தனையருந்தி வாழ்வளித்த தெய்வ
மம்புயற்கு மச்சுதற்கு நடுநின்ற தெய்வ
மரியசெந் தமிழ்மறைக்கே யாசைகொளுந் தெய்வ
மம்பலத்தி லுலகுய்ய வாடுகின்ற தெய்வ
மடியார்க டம்மனதி லமர்ந்திட்ட தெய்வஞ்
செம்பதுமச் சரணபணியத் திருவளிக்குந் தெய்வந்
திகழொற்றி மகிழடியிற் றியாகேச தெய்வம். (௭௨)

இடைச்சியார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வரைநிகர்த்த மார்க்குடங்களிரண்டுடன்மோர் பாற்குடங்கள் வசமாயேந்தி
நிரைவகுத்த குசத்தியரா நம்பாலி லண்டரெலா நேசம் வைக்கத்
திரைமடுத்த வொற்றியினில் விற்றுவரு மிடைச்சியரே செப்பக்கேண்மோ
விரைமிகுத்த வாடையொழித் தரைப்பணமோ ரெற்கீய விரும்புவேனே.

ஈற்றடிமிக்குவந்தநான்கடிக்கலித்தாழிசை.

விரும்புமடி யார்கண்மனம் வேட்டவையெல் லாமீய
வரும்பவனி கொண்டருளி யமர்ந்ததிரு வொற்றியினி
லிரும்புருவச் சங்கிலியா லெழிலாரு ரரைப்பிணித்த
பெரும்புகழி னேப்பாடிப் பேசிடுவோ நன்றே
பெம்மான்றியா கேசனைப் பெரிதுவப்போ நன்றே. (எச)

வண்டுவிடுதூது.

கொச்சகம்.

நலம்விளங்கு மொற்றிநகர் நாதரது மார்பதனில்
பொலம்விளங்குங் கொன்றைமது புசித்துப்பல் புகழ்பாடிக்
கலம்விளங்குந் திருச்செவியிற் கதைத்திடுவா யென்குறையைத்
தலம்விளங்கும் பண்ணிசைகள் சாற்றிமகி ழளியினமே. (எரு)

வஞ்சித்துறை.

இனமலி யொற்றியிற்
சினமற வுற்றிடின்
மனமகிழ் நற்றவ
முனமிக முற்றுமே. (எசா)

நற்றாயிரங்கல்.

கட்டளைக்கலித்துறை.

முற்றும் புனலா லுலக முடிந்து முழுகியநாள்
சற்றுஞ் சலன மடையாத வொற்றித் தனிமுதலே
யெற்று மதனன் மலரா னலிந்திடு மேழையவள்
பற்று மிதழி யுதவா திருந்திடல் பான்மையன்றே. (எஎ)

கலிநிலைவண்ணத்துறை.

தாந்ததன தாந்ததன தாந்ததன தாந்ததன தத்ததானனு.

பாந்தளுழை சார்ந்துதுயில் கூர்ந்துவள ரேந்தலது பக்கம்வாழலா
நேர்ந்தமறை யூர்ந்தகலை யோர்ந்தவனொ டார்ந்தவரை நித்தநாடலாந்
தேர்ந்ததரு வேய்ந்தவல காண்டுவரும் வேந்தனது திக்கையாளவா
மோர்ந்ததமி ழாய்ந்துநித மேன்றளவு வாழ்ந்துவரி னொற்றியூரிலே. (எஅ)

கொற்றியார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஊரிவள ரகணிபல சூழ்ந்தடரு மொற்றியெனு மூரை நாடி
வேரிவளர் துளவணிந்து நாமமிட்டுச் சங்காழி மென்கை தாங்கும்
பாரிவளர் கொற்றியரே மால்வளரும் பலவிடங்கள் பார்த்த துண்டேல்
காரிவள ரனந்தசய னத்தலத்தைத் தரிசிக்கக் காட்டு வாயே. (எகூ)

இஃதுமது.

நேரிசைவெண்பா.

வாயிடைமண் போட்டானை வானரத்தைச் சேர்ந்தானைத்
தாயிடத்து மால்கொண்ட தப்பிலியை—நீயுமால்
கொண்டனையென் றேகண்டு கொற்றியரே யொற்றியினில்
முண்டனஞ்செய் தார்கின் முடி. (அ0)

மடக்கு.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முடித்தார் சிரசின் மதியினையே முடித்தா ரடியார் விருப்பினையே
பொடித்தார் மூன்று புரத்தினையே பொடித் தார்வே யினிடத்தினையே
நொடித்தார் வேத நான்கினையே நொடித்தார் மூவர் தொழிலினையே
பிடித்தா ரரியி னரியினையே பிடித்தா ரொற்றி யூரினையே. (அக)

கார்காலம்.

தாழிசை.

ஊர்ந்துலவி மேகமெலா மழைபொழியுங் கால
மொண்பீலி மிகவிரித்து மயிலாடுங் காலங்
கூர்ந்தகுர லினையடக்கிக் குயிலொடுங்குங் காலங்
குலமாதர் குடமுலைகள் வெம்மையுறுங் கால
மார்ந்தமலர்க் கோடல்விரிந் தலர்கின்ற கால
மாவணிபு ரட்டாசி யணைந்திட்ட காலஞ்
சார்ந்தபுக ழொற்றிநகர் தண்வரையி லேழை
தலைமகனைக் காணாது தனித்திருக்குங் காலம். (அஉ)

மடக்கு.

இன்னிசைவெண்பா.

காலங் கடந்தவரைக் காலங் கடந்தவரை
யால மிடற்றினரை யால மிடத்தினரைப்
பாலத் திருக்கையரைப் பாலத் திருக்கையரைச்
சாலவொற்றி யிற்பணிந்தோஞ் சார்ந்து. (அங)

வேற்றொலிவெண்டுறை.

துன்னுதிரைக்கடலதனி லமுதுடனே யவதரித்துந் தொண்டை நாட்டின்
மன்னுதிரு வொற்றியூ ரார்சடையி னதியுடனே வாழ்ந்து வந்து
மின்னென வனலினை வீசி யெரியினை
யின்னல்செய் தொறுத்திட லெழிலல மதியமே. (அச)

தாழிசை.

மேதினியி லருவருக்கு மிழிகுலத்திற் பிறந்திடினு
 மெய்வெருவு புலைத்தொழிலை விருப்பமொடு புரிந்திடினு
மாதிபுரி நாதனையே யனவரதம் போற்றுமவ
 ரழகடியை நந்சிரசி லணிமுடியாக் கொண்டிடுவா
நீதிமறை யோதிவரும் வேதியரே யாயிடினுந்
 நீடுலகிற் கோலோச்சு நிலமன்ன ராயிடினுந்
தீதில்பர கதியருளுந் தியாகேச ரெழுந்தருளுந்
 திருவொற்றி யூர்வணங்கார் தீயபறைச் சாதியரே. (அரு)

கலிநிலைத்துறை.

சாமவே தப்படன நீங்காத வொற்றிநகர்ச் சங்கரனார்
தாமமே பெற்றிடற்கங் கேதேதோ தந்திரங்கள் சாற்றியவர்
நாமமே மிக்குரைத்து மாரன்வன் செய்கின்ற நலிவகற்றிச்
சேமமே யுற்றிடற்கு நன்னெஞ்சே யோரேதுஞ் செய்திலையே.

கூதிர்காலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

செய்யசெங் கதிரோன்ற னொளிமழுங்கிச் சந்திரனின் செயலை யொக்கப்
பெய்வளையார் கலவிகளில் விருப்பமுற்றுக் கணவருடன் பெட்பி னூர்க்
கொய்மதன னம்பென்ன மழைத்தாரை பொழிகின்ற கூதிர்க் கால [னே.
மெய்ம்முதல்வன் றனைக்காண வொற்றியூர்த் திசைநோக்கி மெலிகின் றே

வலைச்சியார்.

இஃதுமது.

கிஞ்சுகச்செவ் வாயர்பலர் நடமருவொற்றிநகர்க் கிட்டி வாழுங்
கஞ்சனிகர் பார்ப்பார்க்கும் வாயூறக் கெண்டைமீன் கண்ணிற் காட்டி
மிஞ்சுமொழி வலைச்சியரே நீர்விற்று வருகின்ற மீன்க டம்முள்
வஞ்சமின்றிச் சேலையொழித் திருவரா லெற்கீந்தால் வாங்கு வேனே.

நேரிசைவெண்பா.

வேதாவு மாயவனு மென்மனைவி மார்களுடன்
போதாற் சிவனுருவைப் பூசிக்கத்—தாதாவாய்க்
காண்டற் றெருழிலதனைக் காத்தற் செயலதனை
யாண்டளித்தா னொற்றி யரன். (அசு)

கொச்சகம்.

அரம்பழித்த விழியுமையா ளமுதுகைத்த மொழியுடையா
டரம்பகைத்த தனமுடையா டளிர்நிறத்த வடிவுடையா
டிரம்வகுத்த மனங்களிக்கத் திருவொற்றி யூரதனிற்
பரமிருத்த தியாகேசர் பவனிவரக் கண்டாமே. (௯௦)

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கண்களிக்கும் வெள்ளிமலை யிருப்பிடமாய்ப் பொன்மேரு கரத்தி லாரக்
    கழறுமிரு நிதிக்கிழவ னேதோழ னுயருகிற் காத்து நிற்கத்
தண்களிக்கு மலையரையன் புத்திரியாஞ் செல்விவலஞ் சார்ந்து வாழத்
    தகைமைபெறு மண்டமெலா மொருநொடியிற் செயிப்பவர்க டனயராகப்
பண்களிக்கும் பேய்க்கூத்தை யிடுகாட்டிற் பகலிரவாப் பாடி யாடிப்
    பாம்பினையு மரியயர்க ளென்பினையும் பரிவுடனே பணியாப் பூண்டு
மண்களிக்கு மண்டையினி லேந்திபலி யெடுத்துநித மானம் விட்டு
    மகிழொற்றி யூரிலொரு மகிழடியிற் குடிகொண்ட மாய மென்னே. (௯௧)

கட்டளைக்கலித்துறை.

எந்நாளு மேசென்ம வேலைக் கிடந்துழ லேழைநெஞ்சே
மின்னாளு மம்மையப் பன்வாழு மொற்றி வியன்றலத்திற்
றென்னாதெ னாவெனப் பண்பாடிக் கள்ளுண்ணுந் தேனளியாச்
சின்னாண் மகிழ்மரஞ் சேர்ந்தாலு நன்முத்தி சித்திக்குமே. (௯௨)

நேரிசைவெண்பா.

மேவருஞ்சீ ராதிபுரி மேலவனை யேயேத்திப்
பாவ மொருவிடற்குப் பார்ப்பரால்—சேவகஞ்சேர்
பார்த்தன்றன் வில்லதனாற் பட்டவடி யேயோர்ந்து
பார்த்தபெரி யோர்கள் பரிந்து. (௯௩)

சம்பிரதம்.

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பரியவெழு கடலையுமே யுள்ளங்கை யேந்திமிகப் பரிவா யுண்பேன்
    பலவண்டங் களைநொடியிற் சிறுகோலா லேயுடைத்துப் பற்பஞ் செய்வே
னரியபெரு வரைகடமை யெவ்வெவருங் கண்டிடவே யசைத்து நிற்பே
    னடர்சிங்கந் தனையறுகாப் புலியதனைப் புல்லாக வவம திப்பேன்
றெரிதருமிவ் வித்தைகண மாணாக்கர் பாற்கற்றோர் செய்வ தாகுந்
    தேர்ந்தவிஞ்சை யிவையலவாங் கண்காட்டுஞ் சாலமல செப்பக் கேண்மோ
பிரியமுடன் மனந்தனி லோர்பொழுது நினைத்தவுடன் பேரா னந்தப்
    பெரும்பதவி யருளொற்றிக் கிணையாண வொருபதமும் பேசு வேனே.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வேலனை யளித்தார் போலும் வேயினின் முளைத்தார் போலுங்
காலனை யுதைத்தார் போலுங் கரியினை யுரித்தார் போலு
மாலத்தை மடுத்தார் போலு மருமறை யிடத்தார் போலு
மோலத்தை யார்த்தார் போலு மொற்றியூ ரார்த்தார் தாமே. (கூரு)

கழிக்கரைப்புலம்பல்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தாராருந் தாமந் தளிராரு மத்தந்
தளமாரு வில்வத் தனிமார்ப ரொற்றிக்
காராருங் காவே கயலாருங் கழியே
கவினாருந் திரையே கலியாருங் கடலே
வாராரும் பொறியே வகையாரும் புன்னையே
வனமாருங் குருகே வலைவாரு மீனே
சீராரு மென்றன் சிறைமீண்டு வாழத்
திகழ்கேள்வன் சென்ற திசைகண்டி லீரே. (கூசா)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கண்ணையருங் கழலடியிற் களிப்புடனே யருச்சித்த கண்ணன் றன்னைப் [ப்
பண்ணியையக்கொண்டபிரணவப்பொருட்குவிழித்திட்டபகவன்றன்னை
பெண்ணமலை யிடத்தசிவந் தன்னிடத்தி லுதிப்பித்துப் பிறங்குங் காட்சி
தண்ணளிகள் சூழ்ந்தமகி ழடியிருக்க வொற்றியிற்போய்த் தரிசிப் பாயே.

எண்சீர்வண்ணவிருத்தம்.

தானதன தானதந்த தானதன தானதந்த
தானதன தானதந்த தனதான

பாவையரை யேவிரும்பி நாளுமவ ரோடுறைந்து
பாழுமன மேமெலிந்து நலியாதே
பூவலய மேலனந்த லோபிகளை யேபுகழ்ந்து
போதவறி வேயிகழ்ந்து மெலியாதே
நாவலர்க ளோடுகந்து பூதிமணி யேயணிந்து
ஞானசிவ யோகமென்று புரிவேனோ
வாவலுடன் மாமுகுந்த னோடுமய னோர்வணங்கு
மாதிபுரி வாழவந்த பெருமானே.

வெள்ளைச்சந்தவிருத்தம்.

பெருகுதிரு வமிழ்துவரி யொருசுதற்குப் பெயர்த்தளித்தா ரொற்றியூரர்
பருகவரு நமனவனை யொருசுதற்குப் படுத்தொழித்தா ரொற்றியூரர்
குருகுமதி யணிசிரசை யொருசுதற்குக் குனித்திகைத்தா ரொற்றியூரர்
பருமுமையின் முலையமுதை யொருசுதற்குப் பசித்தணித்தா ரொற்றியூரர்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஒற்றியூர்த் தியாகேச ருயர்பவனி தரிசித்தே னுண்டார்க் கொன்றைப்
பெற்றிட்டே னியாவர்களும் பெறற்கரிய பெருவாழ்விற் பிறங்கு கின்றே
னொற்றியூர் மன்மதனும் விழிக்கின்றான் கூட்டாளி விரும்பு கின்றான்
பெற்றிபெறும் பாங்கியரே நம்வாழ்விங் கெவர்க்குண்டு பேசு வீரே. (௧00)

நேரிசைவெண்பா.

பேசுதிரு வொற்றிநகர்ப் பெம்மாற்குத் தேவியா
யாசுகமாய்த் தாங்கு மணிவிடையாய்த்—தேசுற்றான்
பாணர்திரு வாய்மொழியிற் பாடப் பரிந்துவக்கும்
யாணர்வளர் நாரா யணன். (௧0௧)

வாழி.

தனனதன தனனதன தனனதன தானதன.

தவளநிற நிலவியொளிர் தனிவிசிதம் வாழியவே
தருவடிய ரணிகளெனும் விழிமணிகள் வாழியவே
தவமுனிவ ரருளியதொர் தமிழ்மறைகள் வாழியவே
ததைபெரிய வயிறுடைய கரிமுகவன் வாழியவே
தவனனென வெயிலிலகு மயின்முருகன் வாழியவே
தகைமையுய ரருளுருவ வுமைகவுரி வாழியவே
தவழனலின் வருபலகை வடிவிறைவன் வாழியவே
தழைமகிழ மரம்வளரு பிரமபுரி வாழியவே.

திருவொற்றியூர்க்கலம்பகம்

முற்றியது.

சிவமயம்.

இந்நூலாசிரியரியற்றிய நூல்கள்.

சித்தாந்தக்கட்டளை.
சித்தாந்தசாதனக்கட்டளை.
சித்தாந்ததசகாரியக்கட்டளை.
சித்தாந்தவசனபூஷணம்.
திருவான்மியூர்ப்புராணம் (1000-பாடல்.)
பரதகண்டேதிகாசம் (700-பாடல்.)
நீதிசாகரம் (500-பாடல்.)
திருவொற்றியூர்க்கலம்பகம்.
பூவைச்சிங்காரசதகம்.
திருக்கழுக்குன்றந்திரிபந்தாதி.
வேதாசலவெண்பா.
செய்யுளிலக்கணம்.
அனுமசந்தேசம்.
திரிபுரசுந்தரிமாலை.
மகாதேவிமந்திரமாலை.
உருத்திராக்கமாலை.
கடம்பன்கவசம்.
சிவராத்திரிபுராணவசனம்.
திருப்பாசூர்ப்புராணவசனம்.
திருவலிதாயபுராணவசனம்.
திருவேற்காட்டுப்புராணவசனம்.
திருப்பாலவனபுராணவசனம்.
பூவாளூர்ப்புராணவசனம்.
பஞ்சேட்டித்தலபுராணவசனம்.
ஆண்டார்குப்பத்தலமான்மியம்.
வேதசிரேணிமான்மியம்.
செங்கல்வபுரிமகாத்மியம்.
வாயிலார்நாயனார்வைபவம்.
பகவத்கீதார்த்தபங்கம்.
சிவத்துரோககண்டனதூரீகரணம்.
தருக்கசோபானம்.
பதிகங்கள்பற்பல.